Judicial Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவெண்ணெய்நல்லூர்.

C.C. No. 11/2024

2025-ம் ஆண்டு நவம்பர் மாதம் 26-ம் தேதி புதன்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா.1 -வது நபரின் வாக்குமூலம். (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு. V. செல்வகோபால், Grade,III, Bench Clerk அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 1 | தொழில் | - | விவசாயம் |
| பெயர். | - | பழனி | வட்டம் | - | கண்டாச்சிபுரம் |
| த/பெ. | | கிருஷ்ணன் | சமயம் | - | |
| கிராமம் | - | குடமுரட்டி | வயது | - | 59 |

26.11.2025

எதிரி ஆஜர்

**முதல் விசாரணை.**

1. நான் தற்போது குடமுரட்டி கிராமத்தில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். விபத்தில் இறந்த வேல்முருகன் எனது தம்பி. கடந்த 06.08.2019 ந் தேதி இரவு 09.00 மணியளவில் எனதுதம்பியும், முருகனும் இருசக்கர வாகனத்தில் மண்டபம் கிராமத்திற்கு சென்று வேலைக்கு ஆள் கூப்பிட்டுவர சென்றார்கள். மீண்டும் வீட்டிற்கு வந்து கொண்டிருந்த போது பாலம் அருகே இருசக்கர வாகனம் பஞ்சர் ஆகிவிட்டது. அதனால் இருசக்கர வாகனத்தை முருகன் என்பவர் தள்ளிக்கொண்டுவந்தார். அவருக்கு பின்னால் எனது தம்பி நடந்து வந்துகொண்டிருந்தார். அப்போது எனது தம்பிக்கு பின்னால் வந்த இருசக்கர வாகனம் அதிவேகமாக வந்து உறார்ன் அடிக்காமல் எனது தம்பி மீது மோதி விபத்து ஏற்பட்டதாக அங்கிருந்தவர்கள் எனக்கு தகவல் தெரிவித்தார்கள்.

2. நான் எனது தம்பியை பார்ப்பதற்காக திருக்கோவிலூர் அரசு மருத்துவமனைக்கு சென்றேன். எனது தம்பி இறந்துவிட்டதாக தெரிவித்தார்கள். விபத்து ஏற்படுத்திய நபரை மேல்சிகிச்சைக்காக முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றதாக அங்கிருந்தவர்கள் கூறினார்கள். பின்பு அது சம்மந்தமாக அரகண்டநல்லூர் காவல்

நிலையத்தில் புகார் கொடுத்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்தது தான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அந்த புகார் அ.சா.ஆ.1 ஆகும். எனது தம்பி ஓட்டிச்சென்ற வண்டி நெம்பர் தெரியாது. அது முருகனுடையது. விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் பதிவெண் தெரியாது. நான் மருத்துவமனைக்கு சென்ற போது புதூரை சேர்ந்த ஒரு நபர் ஓட்டியதாக சொன்னார்கள். மறுநாள் போலீசார் எனது தம்பியின் பிரேதத்தை பிரேத விசாரணை செய்யும் போது உடனிருந்தேன். போலீசார் விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரி ஆஜர், எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரி தரப்பில் போதுமான வாய்ப்பு கொடுத்தும் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

Judicial Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவெண்ணெய்நல்லூர்.

C.C. No. 11/2024

2025-ம் ஆண்டு நவம்பர் மாதம் 26-ம் தேதி புதன்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா.2 -வது நபரின் வாக்குமூலம். (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு. V. செல்வகோபால், Grade,III, Bench Clerk அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 2 | தொழில் | - | கூலி வேலை |
| பெயர். | - | அய்யனார் | வட்டம் | - | கண்டாச்சிபுரம் |
| த/பெ. | | ஆதிமூலம் | சமயம் | - | |
| கிராமம் | - | குடமுரட்டி | வயது | - | 38 |

26.11.2025

எதிரி ஆஜர்

**முதல் விசாரணை.**

1. நான் தற்போது குடமுரட்டி கிராமத்தில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்த வேல்முருகன் எனது மாமா. கடந்த 2019 ம் வருடம் ஒரு நாள் எனது மாமாவும், முருகனும் ஆள் கூப்பிடுவதற்காக மண்டபம் கிராமத்திற்கு சென்று வீட்டிற்கு வந்து கொண்டிருந்த போது பைபாஸ் பாலம் அருகே முருகன் இருசக்கர வாகனத்தை தள்ளிக்கொண்டு முன்னால் சென்றதாகவும், எனது மாமா பின்னால் வந்து கொண்டிருந்த போது அவர் மீது இருசக்கர வாகனம் மோதிவிட்டதாக ரோந்திற்கு சென்ற போலீசார் எனக்கு தகவல் தெரிவித்தார்கள். நான் உடனே சம்பவ இடம் சென்று பார்த்தேன். எனது மாமாவிற்கு அங்கிருந்த கட்டையில் அடிப்பட்டு காயம் ஏற்பட்டிருந்தது. அவரை 108 ஆம்புலன்ஸில்திருக்கோவிலூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்துச்சென்றார்கள். பின்பு மறுநாள் எனது மாமாவின் பிரேதத்தை பிரேத விசாரணை செய்யும் போது உடனிருந்தேன். போலீசார் விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரி ஆஜர், எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரி தரப்பில் போதுமான வாய்ப்பு கொடுத்தும் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

# Judicial Form No.53

(See Rule 43)

## DEPOSITION OF WITNESS

## (CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவெண்ணெய்நல்லூர்.

C.C. No. 11/2024

2025-ம் ஆண்டு நவம்பர் மாதம் 26-ம் தேதி புதன்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா.3 -வது நபரின் வாக்குமூலம். (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு. V. செல்வகோபால், Grade,III, Bench Clerk அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 3 | தொழில் | - | விவசாயம் |
| பெயர். | - | கோவிந்தன் | வட்டம் | - | கண்டாச்சிபுரம் |
| த/பெ. | | வீரமுத்து கவுண்டர் | சமயம் | - | |
| கிராமம் | - | குடமுரட்டி | வயது | - | 55 |

26.11.2025

எதிரி ஆஜர்

**முதல் விசாரணை.**

1. நான் தற்போது குடமுரட்டி கிராமத்தில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். விபத்தில் இறந்த வேல்முருகன் எனக்கு தெரிந்தவர். கடந்த 2019 ம் வருடம் ஒரு நாள் வேல்முருகனும், முருகனும் ஆள் கூப்பிடுவதற்காக மண்டபம் கிராமத்திற்கு சென்று வீட்டிற்கு வருவதற்காக இருசக்கர வாகனத்தில் வந்து கொண்டிருந்த போது பைபாஸ் பாலம் அருகே இருசக்கர வாகனம் பஞ்சர் ஆகிவிட்டது. அந்த இருசக்கர வாகனத்தை முருகன் தள்ளிக்கொண்டு முன்னால் சென்றதாகவும், பின்னால் வந்த மற்றொரு இருசக்கர வாகனம் வேல்முருகன் மீது மோதி விபத்து ஏற்பட்டதாக எனக்கு தகவல் கிடைத்தது. நான் சம்பவ இடம் சென்று பார்த்த போது வேல்முருகனையும், விபத்து ஏற்படுத்தியவரையும் ஒரே ஆம்புலன்ஸில் திருக்கோவிலூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்துச்சென்றார்கள் என்று அங்கிருந்தவர்கள் எனக்கு தகவல் தெரிவித்தார்கள். நான் திருக்கோவிலூர் அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்த போது வேல்முருகன் இறந்துவிட்டதாக தகவல் தெரிவித்தார்கள். விபத்தை ஏற்படுத்தியவர் பவுன்குமார் என்றும், அவரை மேல்சிகிச்சைக்காக முண்டியம்பாக்கம் அரசு

மருத்துவமனைக்கு அனுப்பி வைத்ததாக தெரிவித்தார்கள். பின்பு மறுநாள் வேல்முருகனின் பிரேதத்தை பிரேத விசாரணை செய்யும் போது உடனிருந்தேன். போலீசார் விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரி ஆஜர், எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரி தரப்பில் போதுமான வாய்ப்பு கொடுத்தும் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

Judicial Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவெண்ணெய்நல்லூர்.

C.C. No. 11/2024

2025-ம் ஆண்டு நவம்பர் மாதம் 26-ம் தேதி புதன்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா.4 -வது நபரின் வாக்குமூலம். (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு. V. செல்வகோபால், Grade,III, Bench Clerk அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 4 | தொழில் | - | மளிகை கடை |
| பெயர். | - | அய்யனார் | வட்டம் | - | கண்டாச்சிபுரம் |
| த/பெ. | | மாணிக்கம் | சமயம் | - | |
| கிராமம் | - | குடமுரட்டி | வயது | - | 56 |

26.11.2025

எதிரி ஆஜர்

**முதல் விசாரணை.**

1. நான் தற்போது குடமுரட்டி கிராமத்தில் வசித்து மளிகை கடை வைத்து நடத்தி வருகிறேன். விபத்தில் இறந்த வேல்முருகன் எனக்கு தம்பி முறை. கடந்த 2019 ம் வருடம் ஒரு நாள் வேல்முருகனும், முருகனும் ஆள் கூப்பிடுவதற்காக மண்டபம் கிராமத்திற்கு சென்று வீட்டிற்கு வருவதற்காக இருசக்கர வாகனத்தில் வந்து கொண்டிருந்த போது பைபாஸ் பாலம் அருகே இருசக்கர வாகனம் பஞ்சர் ஆகிவிட்டது. அந்த இருசக்கர வாகனத்தை முருகன் தள்ளிக்கொண்டு முன்னால் சென்றதாகவும், பின்னால் வந்த மற்றொரு இருசக்கர வாகனம் வேல்முருகன் மீது மோதி விபத்து ஏற்பட்டதாக எனக்கு தகவல் கிடைத்தது. நான் சம்பவ இடம் சென்று பார்த்த போது வேல்முருகனையும், விபத்து ஏற்படுத்தியவரையும் ஒரே ஆம்புலன்ஸில் திருக்கோவிலூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்துச்சென்றார்கள் என்று அங்கிருந்தவர்கள் எனக்கு தகவல் தெரிவித்தார்கள். நான் திருக்கோவிலூர் அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்த போது வேல்முருகன் இறந்துவிட்டதாக தகவல் தெரிவித்தார்கள். விபத்தை ஏற்படுத்தியவர் பவுன்குமார் என்றும், அவரை மேல்சிகிச்சைக்காக முண்டியம்பாக்கம் அரசு

மருத்துவமனைக்கு அனுப்பி வைத்ததாக தெரிவித்தார்கள். பின்பு மறுநாள் வேல்முருகனின் பிரேதத்தை பிரேத விசாரணை செய்யும் போது உடனிருந்தேன். போலீசார் விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரி ஆஜர், எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரி தரப்பில் போதுமான வாய்ப்பு கொடுத்தும் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

Judicial Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவெண்ணெய்நல்லூர்.

C.C. No. 11/2024

2025-ம் ஆண்டு நவம்பர் மாதம் 26-ம் தேதி புதன்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா.5 -வது நபரின் வாக்குமூலம். (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு. V. செல்வகோபால், Grade,III, Bench Clerk அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 5 | தொழில் | - | கார வேலை |
| பெயர். | - | சம்பத் | வட்டம் | - | கண்டாச்சிபுரம் |
| த/பெ. | | வீரமுத்து | சமயம் | - | |
| கிராமம் | - | குடமுரட்டி | வயது | - | 47 |

26.11.2025

எதிரி ஆஜர்

**முதல் விசாரணை.**

1. நான் தற்போது குடமுரட்டி கிராமத்தில் வசித்து கார வேலை செய்து வருகிறேன். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 2 வது சாட்சி கையெழுத்து என்னுடையது தான். மேற்படி கையெழுத்தை சுமார் 6 ஆண்டுகளுக்கு முன்பு காலை 07.00 மணியளவில் நான் வேலைக்காக சென்று கொண்டிருந்த போது உளுந்தூர்பேட்டையிலிருந்து திருவண்ணாமலை செல்லும் சாலையில் உள்ள பாலம் அருகே போலீசார் விபத்து வழக்கு சம்மந்தமாக விசாரணை செய்து படம் வரைந்தனர். அவர்கள் விசாரணைக்கு நான் சாட்சியாக இருந்து அவர்கள் தயார் செய்த பார்வை மகசரில் சாட்சி கையொப்பமிட்டேன். **அந்த பார்வை மகசர் அ.சா.ஆ.2**. போலீசார் விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எதிரி ஆஜர், எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரி தரப்பில் போதுமான வாய்ப்பு கொடுத்தும் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

**(Sd/-R.Senthilkumar)**
**D.M-cum-JM.**
**T.V.Nallur.**